IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM (FAST TRACK MAHILA COURT, UDHAGAMANDALAM) SESSIONS JUDGE OF THE NILGIRIS AT UDHAGAMANDALAM.

| | |
|---|---|
| Sessions | Spl.S.C. 58/2022 |
| | Prosecution |
| Deposition of witness for | LW1, PW2 |
| Name | தவமணி |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |
| Mobile No. | |
| Email I.D | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 13th day of June 2024.

**13.06.2024.**

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

முதல் விசாரணை:-

சத்தியமாக சொல்கிறேன்.

நான் நீலகிரி மாவட்டம் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்தில் சமூக பணியாளராக பணியில் இருக்கிறேன். கடந்த 29.4.2022ம் தேதி நான் பணியில் இருந்தபோது எண் 1098 மூலமாக கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் பந்தலூர் வட்டம் மேங்கோரேஞ்ச் எஸ்டேட்டை சேர்ந்த திலகவதி என்பவரது மகள் சுமார் 16 வயதுடைய 11ம் வகுப்பு படிக்கும் சிறுமி கர்ப்பமாக இருப்பதாக கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் சைல்டு லைன் நிர்வாகி திருமதி. வசந்தகுமாரி என்பவர் நீலகிரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகத்திற்கும், சமூக நலத்துறை அலுவலகத்திற்கும் கொடுத்த தகவலின் பேரில் நானும், கூடலூர் சைல்டு லைன் உறுப்பினர் பார்வதியும், கூடலூர் சமூக நலத்துறை விரிவாக்க அலுவலர் லீலா என்பவர் மேற்படி மேங்கோரேஞ்ச் எஸ்டேட்டிற்கு 29.4.2022ம் தேதி சென்றோம். அங்கு மேற்படி சிறுமியின் தாயாரான

திலகவதி என்பவரிடம் சைல்டு லைன் 1098 மூலமாக உங்களது மகள் கடந்த 6 மாத காலமாக பள்ளிக்கு செல்லவில்லையா என்று கேட்டபோது உடல்நிலை சரியில்லாமல் இருந்ததால் பள்ளிக்கு செல்லவில்லை என்று சொன்னார். பாதிக்கப்பட்ட சிறுமியை நேரில் பார்த்து விசாரித்தபோது அவர் பந்தலூர் அரசு மேல்நிலை பள்ளியில் 11ம் வகுப்பு படிப்பதாகவும், அவரது தந்தையார் உடல்நிலை சரியில்லாமல் கடந்த 2019ம் ஆண்டில் இறந்துவிட்டதாகவும், அவரது குடும்பம் மேங்கோரேஞ்ச் பகுதியில் எஸ்டேட்டில் வசிப்பதாகவும், அவரது தாயார் மேற்படி எஸ்டேட்டில் தொழிலாளியாக வேலை செய்கிறார் என்றும் அவருக்கும் அவரது தாயாருக்கும் கடந்த 6 மாத காலமாக உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாகவும் அவருடன் பிறந்தவர்கள் 4 மூத்த சகோதரிகள், 2 மூத்த அண்ணன்கள் மற்றும் ஒரு தம்பி இருப்பதாகவும், ஒரு மூத்த சகோதரிக்கும், 2 அண்ணங்களுக்கும் திருமணமாகிவிட்டதாகவும், 3 சகோதரிகளும் திருப்பூரில் தங்கி தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதாகவும், தம்பி மேற்சொன்ன அதே பள்ளியில் 9ம் வகுப்பு படிப்பதாகவும் கூறினார். மேலும் அந்த சிறுமியை ஏன் பள்ளிக்கு நீங்கள் செல்லவில்லை என கேட்கபோது அவர் வசிக்கும் அதே பகுதியில் வசிக்கும் பாபு என்கிற சுதாகர் என்பவர் அவரது குடும்பத்தாருடன் நெருங்கி பழகியதாகவும் தந்தையார் இல்லாததால் அவரது குடும்பத்திற்கு நிறைய உதவிகள் செய்ததாகவும், பின்னர் கடந்த 6.9.2021ம் தேதி கொரோனா தொற்று காலகட்டத்தில் பள்ளி இயங்கவில்லை என்பதால் வீட்டில் இருந்தபோது காலையில் வந்து மேற்படி சுதாகர் சாப்பாடு கொண்டுவந்து கொடுத்ததாகவும், சாப்பிட்டுவிட்டு பாத்திரங்களை மேற்படி சுதாகர் வீட்டிற்கு கொண்டுபோய் கொடுக்க மதியம் 12 மணி அளவில் சென்றபோது அவர் தன்னை உள்ளே அழைத்தாகவும், அப்போது மேற்படி சுதாகர்

அவரது வீட்டு கதவை அடைத்துவிட்டு தனக்கு பாலியல் துன்புறுத்தல் செய்ததாகவும், அவர் அங்கியிருந்து தப்பிவிட முயன்றபோது மேற்படி சுதாகர் அவரை மிகவும் பிடிக்கும் என சொல்லி தனது ஆடைகளை கழட்டிவிட்டு, தன்னை வன்புணர்வு செய்ததாகவும், மேலும் இதேபோன்று பள்ளி செல்லாத காலங்களில் அடிக்கடி தன்னுடன் உடல் ரீதியான உறவு வைத்துகொண்டதாகவும் கூறினார். மேலும் எந்த விவரங்களை அவரது தாயாரிடம் சொன்னால் உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டியதாகவும், அதனால் பயந்துகொண்டு அவர் தனது தாயாரிடம் சொல்லவில்லை என்றும் மேலும் 2021ம் ஆண்டு செப்டரம்பர் மாதத்தில் இருந்து தனக்கு மாதவிலக்கு நடக்கவில்லை என்றும் பின்னர் அவரது வயிறு பெரியதாக இருப்பதை பார்த்து அவரது தாயார் அழுதுகொண்டு கேட்டபோது தனக்கு செப்டம்பர் மாதத்தில் இருந்து மாதவிலக்கு ஆகவில்லை என்று சொன்னதாகவும் சொன்னார். நாங்கள் விசாரித்தபோதும் மேற்படி விவரத்தையை எங்களிடம் சொன்னார். நாங்கள் மேற்படி சிறுமியையும் அவரது தாயாரையும் தேவாலா அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று மேற்படி பாபு என்கிற சுதாகர் மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் கொடுத்தோம். அந்த புகார் இதுதான். அது அசாஆ 2. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

பாலியல் சம்மந்தமாக புகார்கள் எங்களுக்கு வரும்போது அதுகுறித்து எங்கள் அலுவலகத்தில் பராமரிக்கும் நாட்குறிப்பில் குறித்து வைப்போம் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தப்பட்ட புகார் பெற்றவும் அதையும் அந்த நாட்குறிப்பில் குறித்து வைத்துள்ளோம். மேற்படி நாட்குறிப்பையோ அதன் சுருக்கத்தையோ ஆய்வாளர் எங்களிடமிருந்து பெற்றாரா என்றால் பெறவில்லை. இந்த வழக்கு சம்பவத்திற்கும்

எங்களுக்கு தகவல் கிடைத்து நாங்கள் புகார் கொடுத்ததற்கும் இடையே சுமார் 7 மாதங்கள் 24 நாட்கள் காலதாமதம் உள்ளது என்றால் சரிதான். ஆனால் நாங்கள் எங்களுக்கு தகவல் கிடைத்தவுடனே பாதிக்கப்பட்ட சிறுமியை விசாரித்து புகார் கொடுத்தோம். காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்போது பிற்பகல் நேரம் என்றால் சரிதான். போலிசார் என்னையும் புகார் கொடுத்த தேதியில்தான் விசாரித்தார்கள். பாதிக்கப்பட்ட சிறுமியிடம் நாங்கள் சரியான முறையில் விசாரணை செய்யாமல் தவறுதலாக இந்த எதிரி மீது புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புள்ளவிவர கணக்கிற்காக இந்த புகார் பொய்யாக கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>:- இல்லை.

Sd/- Dhavamani/

Typed down to my dictation, in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/Thiru. P. Karunanidhi/
SESSIONS JUDGE,
MAGALIR NEETHIMANDRAM,
(FTMC),UDHAGAMANDALAM.